செ.வெ.எண்:18 நாள்.15.08.2020

**கரூர் மாவட்டம்**

**இந்தியத்திருநாட்டின் 74வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, காவல்துறையின் மரியாதையினை ஏற்று, கொரோனா தொற்று தடுப்பு பணியில் சிறப்பாக ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்கள்**

அதன் விபரம் வருமாறு:

இந்தியத்திருநாட்டின் 74-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் இன்று (15.08.2020) நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப.,அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் அனைவரிடமும் சமத்துவம் நிலவும் வகையில் சமாதானப் புறாக்களை பறக்கவிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பொ.பகலவன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கொரோனா தடுப்பு பணியில் இரவு,பகல் பாராது அர்ப்பணிப்பு உணர்வுடன் ஈடுபட்டுவரும் மருத்துவர்கள், காவல்துறை அலுவலர்கள், வருவாய்த்துறை மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள், செவிலியர்கள், தூய்மைப்பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளை சார்ந்த 113 நபர்களை பாராட்டி நற்சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

கொரோன தொற்றுப் பரவலை தடுக்கும் வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் நகிழ்விடத்திற்கு வரும்பொழுது கைகளை நன்கு கழுவியபிறகே அனுமதிக்கப்பட்டனர். அனைவரும் முகக்கவசம் அணிந்து, சமூக விலகலைக்கடைபிடித்து பங்கேற்றனர்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி எஸ்.கவிதா, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அசோகன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி வ.சந்தியா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், குளித்தலை சார் ஆட்சியர் திரு.அப்துல்ரகுமான்,இஆப., உதவி ஆணையர் கலால் திருமதி.மீனாட்சி, ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.லீலாவதி, மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வி.ஹஸ்ரத்பேகம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக மேலாளர்கள் திரு.ராம்குமார்(பொது), திரு.சுரேஸ்குமார்(குற்றவியல்), மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செம்பகவள்ளி உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**